நகர் ஊரமைப்பு துறை (DTCP)
திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
பாப்பம்பட்டி ஊராட்சி (மு) கிராமம்
(திட்டமில்லா பகுதி)

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்-15/2B2,2C1 ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

விண்ணப்ப எண் : RSXVH7QC நாள்: 06.04.2024

அளவு : (1:400)(1செ.மீ=4.0மீ)


குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	1.22 ஏக்கர் (அ) 4940.00 ச.மீ
சாலையின் பரப்பளவு	:	1037.47 ச.மீ
ஒதுக்கப்பட்ட மனைகள்	:	20
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	
மனைப்பிரிவு சாலை	:	

பொது ஒதுக்கீடுகள்

(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை).

1. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 1037.47 ச.மீ (சாலை பரப்பு மற்றும் மூலை முடக்கு உட்பட)
2. பூங்கா
   - i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (4940.00-1037.47) x 10% = 390.25ச.மீ
   - ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : 396.50ச.மீ 10.16%
3. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை பொது உபயோகம் (பஉ) பரப்பு:
   - ஒதுக்கிய பரப்பு : 29.04 ச.மீ (0.74%)
4. TANGEDCO-க்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை (பஉ) பரப்பு:
   - ஒதுக்கிய பரப்பு : 21.02 ச.மீ (0.54%)



கட்டிட வரம்பு

9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்பட்டல் வேண்டும்.
9.0 மீ முதல் 18.0 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்பட்டல் வேண்டும்

மூலை முடக்கு

12.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்பட்டல் வேண்டும்
12.0மீ மேல் 30.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீம் விடப்பட்டல் வேண்டும்.

1. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020- ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் :19799/2020/போ நாள் 24.12.2020- ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு மற்றும் பூங்கா ஆகியவையும் உள்ளாட்சிக்கும், அரசாணை எண்.18, ந.நி.(மு).கு.வ.(நப.ப.1) துறை நாள் :04.02.2019-ன் படியும், அரசாணை எண் :16 ந.நி.(மு).கு.வ.துறை நாள்:31.01.2020-ன் படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும் , TANGEDCO என ஒதுக்கீடு செய்யப்பட்டுள் எதினை மின்பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது ஊராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும்,சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபடநகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6மீ X 1.2மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடம் தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பி பாதையினை அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவின் சாலைக்கேற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைபின்படி " The Tamilnadu Government in G.O.Ms.No:112, Housing and Urban Development Department ,Dated :22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise,Market book, sell or offer for sale,or invite persons to purchase in any manner any plot apartment or building ,as the case may be in amy Real Estate Projector part of it only after registering the real estate project with the TNRERA (Tamilnadu Real Estate Regulatory Authority)".

குறிப்பு : அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO- 100/2024

சு.மகேந்திரன்
அளவர்/ வரைவாளர்

Signature valid
Signed by: Deputy Director
Location: Dindigul
Date: 2024.05.06 21:01:18

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Dindigul
Date: 2024.05.23 16:42:26

ம.விஜயகுமார்
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2

துணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல மாவட்டம்